**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International
Issue DOI: https://doi.org/10.63300/tm12032026
Available online at: www.tamilmanam.in

**Vol. 12 No. 03 (2026): August 2026**, **p521-532** | *Original Research Paper*

# பொன்னீலன் படைப்புகளில் நெய்தல் நிலத்தாவரங்கள்

## Neithal Land Flora in the Works of Ponneelan

**திருமதி சு.வினோதா,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் – 05

**Mrs. S. Vinotha,**

*Assistant Professor, Department of Tamil, Sona College of Arts and Science, Salem - 05*

*Email: srimegha775@gmail.com, Tel: 8098224646.*

*Article history*
Received: 20-07-2026
Revised: 01-08-2026
Accepted: **06-08-2026**
Published on: **20-08-2026**

*Corresponding Author Email: *srimegha775@gmail.com*

**Abstract:** No creator can construct their fictional world without recognizing nature as the primary setting and central theme. It is a global literary tradition for writers born in naturally scenic regions to highlight the ecological structure of their native land and convey the necessity for both the public and the government to protect it. Among such creators, the works of writer Ponneelan—who wrote with Marxist thought and socio-historical awareness against the backdrop of Kanyakumari district, a domain of nature—are unique. The lifestyle system of the people of Kanyakumari district is in no way inferior to the Thinai-based lifestyle of the ancient Tamils, who organized their way of living around the five types of landscapes (Aivagai Nilam).

In particular, Ponneelan has brilliantly highlighted the coastal (Neithal) lifestyle of that region and the traditional ecological knowledge of its people through his novels Marupakkam and Thedal. This article comprehensively examines the uses of Neithal land flora featured in Ponneelan's works—such as Alexandria Laurel (Calophyllum inophyllum), Cashew (Anacardium occidentale), Screw Pine (Pandanus tectorius), and Beach Morning Glory (Ipomoea pes-caprae)—along with regional dialect terms ('Paralgal', 'Velichhennai', 'Kolla Maram', 'Andi', 'Kadumbukkodi'), Sangam literature connections, and modern botanical/medicinal properties from the perspectives of Ecocriticism and Ethnobotany.

**Keywords:** *Neithal Land, Ponneelan, Marupakkam, Thedal, Alexandria Laurel nut (Punnaikkai), Cashew, Screw Pine (Thaazhai), Beach Morning Glory (Adumbukkodi), Ecocriticism, Ethnobotany.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

### 1.1 ஆய்வுச்சுருக்கம்

இயற்கையைக் களம் உணர்ந்து பாடுபொருளாகக் கொள்ளாமல் எந்தவொரு படைப்பாளரும் தனது புனைவு உலகத்தைக் கட்டமைக்க முடியாது. இயற்கை எழில் கொஞ்சும் நிலப்பகுதியில் பிறந்த படைப்பாளர்கள், தங்களது தாய்நிலத்தின் சூழலியல் அமைப்பைச் சுட்டிக்காட்டி, அதனை மக்களும் அரசும் பாதுகாக்க வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துவது உலகளாவிய இலக்கிய மரபாகும். அத்தகு படைப்பாளர்களுள் இயற்கையின் உறைவிடமாகத் திகழும் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பின்னணியாகக் கொண்டு மார்க்சியச் சிந்தனையோடும் சமூக வரலாற்று விழிப்புணர்வோடும் எழுதிய எழுத்தாளர் பொன்னீலன் அவர்களின் படைப்புகள் தனித்துவமானவை. ஐவகை நிலங்களின் அடிப்படையில் தங்களது வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்ட பண்டைத்தமிழர்களின் திணைச் சார்ந்த வாழ்வியலுக்குச் சற்றும் சளைக்காதது குமரி மாவட்ட மக்களின் வாழ்வியல் அமைப்பாகும்.

குறிப்பாக, அந்நிலப்பகுதியின் நெய்தல் சார்ந்த வாழ்வியலையும், மக்களின் சுற்றுச்சூழல் சார்ந்த மரபுவழி அறிவையும் பொன்னீலன் அவர்கள் 'மறுபக்கம்', 'தேடல்' ஆகிய தனது புதினங்களின் வழியே மிகச் சிறப்பாக அடையாளப்படுத்தியுள்ளார். இக்கட்டுரையானது பொன்னீலனின் படைப்புகளில் இடம்பெற்றுள்ள புன்னை (*Calophyllum inophyllum*), முந்திரி (*Anacardium occidentale*), தாழை (*Pandanus tectorius*), அடும்புக்கொடி (*Ipomoea pes-caprae*) ஆகிய நெய்தல் நிலத் தாவரங்களின் பயன்பாடுகள், வட்டார வழக்குச் சொற்கள் ('பரல்கள்', 'வெளிச்செண்ணெய்', 'கொல்லா மரம்', 'அண்டி', 'கடும்புக்கொடி'), சங்க இலக்கியத் தொடர்புகள் மற்றும் நவீனத் தாவரவியல்/மருத்துவக் குணங்களைச் சூழலியல் திறனாய்வு (Ecocriticism) மற்றும் இனக்குழுத் தாவரவியல் (Ethnobotany) நோக்கில் விரிவாக ஆராய்கின்றது.

### 1.2 குறிப்புச்சொற்கள்

நெய்தல் நிலம், பொன்னீலன், மறுபக்கம், தேடல், புன்னைக்காய், முந்திரி, தாழை, அடும்புக்கொடி, சூழலியல் திறனாய்வு, இனக்குழுத் தாவரவியல்.

## 2. முன்னுரையும் சூழலியல் கோட்பாடும்

### 2.1 இயற்கையும் மனித வாழ்வியல் தகவமைப்பும்

உயிரினங்கள் பூவுலகில் தடையின்றி உயிர் வாழ்வதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் இயற்கை தன்னகத்தே உருவாக்கி வைத்துள்ளது. மண், நீர், காற்று, தட்பவெப்ப நிலை போன்ற இயற்கை அமைப்புகளில் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டாலும், மனிதன் தனது தகவமைப்புத் திறனால் அதற்கு ஏற்பத் தன்னை மாற்றியமைத்துக் கொள்கின்றான். மழை, காடு, வயல், கடல், வறண்ட பூமி எனப் பூமி புவியியல் அடிப்படையில் பல வகைப்பட்டிருந்தாலும், அச்சூழலுக்குத் தகுந்த வாழ்வியல் முறைக்கு மனித இனம் பழகிக் கொள்கிறது. எனவே, இயற்கை மாறுபாடுகளுக்கு ஏற்ப மனிதனின் பண்பாட்டுச் சூழல்களும்,

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

குணநலன்களும், பேச்சு நிலைகளும், மொழி வழக்குகளும் கூட இயல்பாக மாறுபடுகின்றன. சூழலியல் அடிப்படையில் மாறுபாடு அடையும் மனித வாழ்வியல், இலக்கியப் படைப்புகளின் பேசுபொருளாகி நவீன ஆய்வுக் கோட்பாடுகளால் ஆராயப்படுகின்றன. தமிழகத்தின் தென்கோடியில் அமைந்த குமரி மாவட்டம் ஐந்து வகையான இயற்கைச் சூழல்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. அவ்வைவகைச் சூழல்களையும் பொன்னீலன் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ள போதிலும், அவற்றுள் நெய்தல் நிலச்சூழலையும் தாவரங்களையும் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**2.2 சூழலியல் திறனாய்வு மற்றும் பண்பாட்டுப் புவியியல் கோட்பாடு**

பழங்காலத்தில் மனிதன் இயற்கையை வெறும் அறிவியல் பொருளாகப் பாராமல், தன் வாழ்வியலோடு பிணைந்த ஆன்மாவாகக் கொண்டு வாழ்ந்துள்ளான். "குறிப்பிட்ட இடத்தில் காலத்தில் காணப்படும் சுற்றுப்புற நிலைமைகளின் கூட்டே சுற்றுச்சூழல்" என்று நா. கருணாநிதி அவர்கள் சுற்றுச்சூழல் கல்வி குறித்து வரையறுக்கின்றார். மேலும், "தாய்மொழி என்பது சுற்றுச்சூழலில் இருந்து தோற்றம் கொள்வதால் மக்களின் பண்பாட்டில் அங்குள்ள மலைகள் காடுகள் ஆறுகள் கடல் போன்றவை ஒன்றோடு ஒன்று பிணைந்து இருக்கும் அத்துடன் அவர்கள் பேசும் மொழி அதன் இயற்கையை அதன் வளத்தை அவர்களுக்கு நினைவுறுத்திகொண்டே இருக்கும்" என்று சுற்றுச்சூழல் அறிஞர் நக்கீரன் கூறுவது, இயற்கை மனிதப் பண்பாட்டிலும் மொழியிலும் ஏற்படுத்திய ஆழமான தாக்கத்தை உணர்த்துகிறது. மனிதப் பண்பாடு புவியியல் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது என்பதை வரலாற்று ஆசிரியர் பி. டி. சீனிவாச ஐயங்கார் பின்வருமாறு விளக்குகிறார்:

"If the culture of a people is indigenous to the soil on which they live if it appears to have grown in C2 before they came in contact with other people it must be solely due to the influence of their physical surrounding your culture that has grown as the reaction of a people to their will you is due to geographical and not historical causes be the influence like the influence of foreign people who have come in touch with them by conquest or pray or other forms of peaceful intercourse"

இக்கூற்று மனிதனின் பண்பாட்டு உருவாக்கத்திற்குப் புவியியல் மற்றும் இயற்கைச் சூழலே முதன்மைக் காரணியாகத் திகழ்கின்றது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

**3. குமரி மாவட்ட நெய்தல் நிலவியலும் சமூக வரலாற்றுப் பின்னணியும்**

**3.1 தொல்காப்பிய நெய்தல் திணை வரையறையும் கடலோர ஊர்களும்**

நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த நிலப்பகுதியையும் குறிக்கும் தொன்மைமிக்க நிலப்பிரிவாகும். தொல்காப்பியர் நெய்தல் நிலத்தை,

"வருணன் மேய பெருமணல் உலகமும்" (தொல்காப்பியம், அகத்திணையியல், நூ.5)

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

என்று வருணனை வழிபடும் மணல் நிறைந்த கடல் பகுதியாக அடையாளப்படுத்துகின்றார். பிங்கல நிகண்டு ஆசிரியரும்,

"அருங்கடல் நெய்தல் நிலப்பெயராகும்" (பிங்கல நிகண்டு, நூ.136)

என்று நெய்தல் நிலத்தின் முதன்மை அடையாளமாகக் கடலைச் சுட்டுகின்றார். இவ்வாறு நெய்தல் நிலமானது கடல், உப்பங்கழி, மணற்பரப்பு ஆகியவற்றைத் தன் அகமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் நெய்தல் நிலப்பகுதிகளுள் அரபிக்கடல், வங்காள விரிகுடா, இந்தியப் பெருங்கடல் என்னும் முக்கடல்கள் சங்கமமாகும் குமரி மாவட்டம் புவியியல் ரீதியாகத் தனிச்சிறப்புடையது. குமரி மாவட்டத்தின் நெய்தல் நிலச் சூழலையும் கடலோரக் கிராமங்களின் வாழ்வியலையும் பொன்னீலன் தனது 'மறுபக்கம்' மற்றும் 'தேடல்' ஆகிய புதினங்களில் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

பொன்னீலனின் படைப்புகளில் குறிப்பிடப்படும் முக்கியக் கடலோர ஊர்கள் பின்வருமாறு சுட்டப்படுகின்றன:

- முட்டம்
- கடியப்பட்டினம்
- தேங்காய்ப்பட்டினம்
- பெருந்துறை
- விளாத்துறை
- பெரிய காட்டுத்துறை
- ஈத்தாமொழி
- காயல் கரை

இவ்வூர்கள் யாவும் நெய்தல் நிலத்தின் இயற்கை வளத்தையும், பரதவ மக்களின் உற்பத்தி முறைகளையும், தலைமுறை தலைமுறையாக நகர்ந்து செல்லும் அவர்களின் பண்பாட்டு வாழ்வையும் பிரதிபலிக்கும் வரலாற்று மையங்களாகத் திகழ்கின்றன.

### 3.2 பொன்னீலன் புதினங்களின் வரலாற்று மற்றும் சமூகப் பின்புலம்

எழுத்தாளர் பொன்னீலனின் 'மறுபக்கம்' நாவல் வெறும் புனைவு கதையல்ல; அது குமரி மாவட்டத்தின் இருநூறு ஆண்டுகாலச் சமூக வரலாற்றைப் பதிவு செய்துள்ள மாபெரும் வரலாற்று ஆவணமாகும். 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற மண்டைக்காடு கலவரத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்நாவல், 19ஆம் நூற்றாண்டின் தொடக்ககால வரலாற்றுப் பதிவுகளை நோக்கித் திரும்புகின்றது. முன்னாள் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் நிலவிய சாதிய அடுக்குமுறைகள், ஒடுக்கப்பட்ட பெண்களின் தோள்சீலைப் போராட்டம் (Upper Cloth Revolt), வைகுண்ட சுவாமிகளால் தோற்றுவிக்கப்பட்ட ஐயாவழி இயக்கம், கிறித்தவ சமயத்தின் வருகையும் மத மாற்றங்களும், அடிமைமுறை ஒழிப்பு மற்றும் குமரி மாவட்டத்தைத் தமிழ்நாட்டோடு இணைப்பதற்காகத் தியாகி நேசமணி தலைமையில்

நடைபெற்ற எல்லைப் போராட்டங்கள் ஆகிய சமூக-அரசியல் நகர்வுகள் இந்நாவலின் பின்புலமாக அமைகின்றன.

இத்தகைய கொந்தளிப்பான சமூக வரலாற்றின் ஊடே, நெய்தல் நில மக்களின் எளிய அன்றாட வாழ்வாதாரமும், அவர்கள் இயற்கையோடு கொண்டிருந்த பிணைப்பும், நிலத்தைச் சார்ந்து அவர்கள் உருவாக்கிய மரபுசார் தாவர அறிவும் பொன்னீலனால் நுட்பமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

## 4. பொன்னீலன் படைப்புகளில் நெய்தல் நிலத்தாவரங்கள்: இலக்கியமும் பண்பாட்டுப் பயன்பாடும்

குமரி மாவட்டத்தின் நெய்தல் நிலப்பரப்பில் இயற்கையாக வளரக்கூடியத் தாவரங்களுள் புன்னை, முந்திரி, தாழை, அடும்புக்கொடி ஆகியவை பொன்னீலனின் படைப்புகளில் மிகச் சிறப்பாகவும் யதார்த்தமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### 4.1 புன்னை மரமும் வெளிச்செண்ணெய் விளக்கு மரபும்

புன்னை (*Calophyllum inophyllum*) என்பது நெய்தல் நிலத்திற்குரிய முதன்மையான மரவகைத் தாவரமாகும். 'புன்னைக்காய்' என்பது பழங்காலத்தில் விளக்கெண்ணெய் தயாரிப்பதற்குப் பயன்பட்ட ஒரு முதன்மையான நெய்தல் நிலத் தாவரப் பொருளாகும். மின்சார வசதி இல்லாத பழங்காலத்தில், மக்கள் எண்ணெய்களால் நிரப்பப்பட்ட விளக்குகளையே வெளிச்சத்திற்காகப் பயன்படுத்தினர். அக்காலத்தில் விளக்கு எரிப்பதற்குப் புன்னைக்காயிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட எண்ணெயே பெரும்பான்மையாகப் பயன்பட்டுள்ளது. காய்ந்த புன்னைக்காயிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் ஊற்றி ஏற்றப்பட்ட விளக்கிலிருந்து வெளிப்படும் நறுமணப் புகையைக் குறித்துச் சிறுபாணாற்றுப்படை பின்வருமாறு பதிவு செய்துள்ளது:

"புன்னை நறுநெய் புகையும்" (சிறுபாணாற்றுப்படை, பா.அ.148)

இவ்வாறு வீட்டிற்கும் வழிபாட்டிற்கும் விளக்கேற்ற ஊற்றிப் பயன்படுத்தப்பட்டதால், இது பொதுவழக்கில் 'விளக்கெண்ணெய்' என்றும் அழைக்கப்பட்டது. இருப்பினும் இது தற்கால ஆமணக்குச் செடியிலிருந்து பெறப்படும் விளக்கெண்ணெயில் இருந்து முற்றிலும் மாறுபட்ட தாவரவியல் மூலத்தைக் கொண்டது. புன்னைக்காய் எண்ணெயை ஊற்றி விளக்கு எரிப்பதால் அதிலிருந்து வெளிவரும் மஞ்சள் நிற வெளிச்சம் கண்களுக்குக் குளிர்ச்சியை ஏற்படுத்துவதோடு, கண் சார்ந்த நோய்களிலிருந்தும் கண்களைப் பாதுகாக்கும் மருத்துவத் தன்மை கொண்டதாகக் கருதப்பட்டது. இத்தகைய மருத்துவ குணம் கொண்ட புன்னை எண்ணெய், பாரம்பரியத் தோல் நோய்களுக்கான மருந்து தயாரிப்பிலும் முக்கியப் பங்கு வகித்தது.

குமரி மாவட்ட மக்கள் மத்தியில் புன்னை மரத்தின் விதைகள் 'பரல்கள்' என்று அழைக்கப்படுகின்றன. வெளிச்சம் தருவதற்குப் பயன்பட்டதால் இவ்விடத்து மக்கள் இதனை 'வெளிச்செண்ணெய்' என்றும், புன்னைக்காயிலிருந்து எடுக்கப்பட்டதால் 'புன்னைக்காய்

எண்ணெய்' என்றும் வட்டார வழக்கில் அழைத்தனர். பொன்னீலன் தனது 'மறுபக்கம்' புதினத்தில் இச்சுடர்மரபினைக் கீழ்வருமாறு விவரிக்கின்றார்:

"மேடை அருகே நின்ற பெரிய வெளிச்செண்ணெய் விளக்கில் இருந்து மஞ்சள் ஒளி அவர்களின் பரட்டைத் தலைகள் மீது அசைந்து கொண்டிருந்தது." (பொன்னீலன், மறுபக்கம், ப.131)

"மாடக்குழியில் புன்னைகாய் எண்ணெய் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் வெளிச்சம் சுற்றி நிற்கிறவர்கள் மீது திட்டு திட்டாக அசைந்தது." (பொன்னீலன், மறுபக்கம், ப.135)

மேற்கண்ட சான்றுகளின் வழி, நெய்தல் நில மக்களின் அன்றாட வாழ்க்கையோடும் வழிபாட்டோடும் புன்னை மரம் எவ்வாறு இரண்டறக் கலந்திருந்தது என்பதை அறிய முடிகிறது. சங்க இலக்கியங்கள் காட்டும் 'புன்னை நறுநெய்' பற்றிய பதிவுகள், நவீன இலக்கியமான பொன்னீலனின் 'மறுபக்கம்' புதினம் வரை தொடர்வதை இதன் மூலம் காண முடிகின்றது. குமரி மாவட்ட மக்களின் வட்டார வழக்குகளான 'பரல்கள்', 'வெளிச்செண்ணெய்' போன்ற சொற்கள், புன்னை மரத்தின் பயன்பாட்டையும், அதன் மருத்துவக் குணங்களையும் பறைசாற்றும் வரலாற்று ஆவணங்களாக இப்படைப்புகளில் நெய்தல் நிலப் பண்பாட்டோடு பதிவு செய்யப்பட்டுள்ளன.

**4.2 முந்திரி (கொல்லா மரம்) - பொய்க்கனி மற்றும் அண்டி உடைப்பு வாழ்வாதாரம்**

குமரி மாவட்டத்தின் தாவர அடையாளங்களுள் முந்திரி மரம் (*Anacardium occidentale*) முக்கிய இடத்தைப் பெறுகிறது. இதன் பழத்திற்கு வெளியில் விதை (அண்டி) அமைந்து காணப்படுவதால், தாவரவியலில் இதனைப் 'பொய்க்கனி' (False Fruit) என்று அழைப்பர். குமரி மாவட்ட வட்டார வழக்கில் இம்மரம் 'கொல்லா மரம்' என்றும், இதன் பழம் 'கொல்லாம்பழம்' என்றும், இதன் விதை 'அண்டி' என்றும் அழைக்கப்படுகின்றது. சங்க இலக்கியங்களில் முந்திரிப் பூவின் வடிவமைப்பு குறித்துப் பதிவுகள் பரவலாகக் காணப்படுகின்றன. ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று முந்திரிப் பூவின் மென்மை வடிவத்தைக் குறிப்பிடுகின்றது:

"குறுங்கால் முந்திரிப் பூவின் அன்ன" (ஐங்குறுநூறு, பா.எ.62)

வேனில் காலத்தில் (கோடைகாலத்தில்) விளையும் ஊட்டச்சத்து மிகுந்த, துவர்ப்புச் சுவையுடைய முந்திரிப் பழங்களை (கொல்லாம்பழம்) இம்மரங்கள் தருகின்றன. இப்பழங்கள் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறங்களில் கண்ணைக் கவரும் வகையில் காணப்படும். கோடையில் ஏற்படும் உடல் சூட்டைத் தணித்துக் குளிர்ச்சியைத் தரும் இயல்புடையது இப்பழம். இருப்பினும் மக்கள் இப்பழத்தை விடவும், அதன் அடியில் தொங்கும் விதைக்குள் இருக்கும் பருப்பையே (முந்திரிப்பருப்பு) அதிகம் விரும்பி உண்கின்றனர்.

குமரி மாவட்ட மக்கள் இவ்விதையைக் காய்ந்த சருகுகள் கொண்டு சுட்டு, பின் கருகிய மேலோட்டைப் பிரித்தெடுத்து உள்ளிருக்கும் பருப்பை உண்ணும் மரபுசார் வழக்கத்தைக் கொண்டுள்ளனர். விருந்தினர்களுக்கும் கிறித்தவப் போதகர்களுக்கும் வழங்கும் உபசரிப்புச்

சிற்றுண்டியாக முந்திரிக்கொட்டைகள் வறுக்கப்பட்டதை எழுத்தாளர் பொன்னீலன் பின்வருமாறு பதிவு செய்துள்ளார்:

"விடிலியின் பின்னே போதகருக்காக வறுபடும் முந்திரிக்கொட்டையின் இனிய வாசனை கம்மென எழும்பியது" (பொன்னீலன், மறுபக்கம், ப.137)

குமரி மாவட்டத்தில் முந்திரிக்கொட்டைகளில் இருந்து பருப்பைப் பிரித்தெடுக்கும் 'அண்டி உடைப்புத் தொழில்', அப்பகுதி எளிய பெண்களுக்கு ஒரு முதன்மையான வாழ்வாதாரத் தொழிலாக இன்றும் விளங்கி வருகிறது. இவற்றைத் தொகுத்து நோக்குகையில், முந்திரி மரம் என்பது வெறும் நுகர்வுப் பொருள் மட்டுமல்லாமல், சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழர்களின் வாழ்வியலோடும், கணித அளவைகளோடும், பொருளாதாரத்தோடும் பிணைந்துள்ள ஒரு தாவரமாகும். குமரி மாவட்டத்தின் புவியியல் சூழலுக்கு உகந்த பயிராக விளங்கும் இம்முந்திரி, அந்நிலப்பகுதியின் நெய்தல் மற்றும் அதனைச் சார்ந்த மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதிலும், அவர்களின் பண்பாட்டு அடையாளத்தைத் தக்கவைப்பதிலும் மிக முக்கியப் பங்காற்றுகிறது.

### 4.3 தாழை - அழகியல், நறுமணமும் கடற்கரை இயற்கை வேலியும்

தாழை (*Pandanus tectorius*) என்பது புதர் வகையைச் சார்ந்த நெய்தல் நிலத் தாவரமாகும். இது கடற்கரைப் பகுதிகளில் இயற்கையான பாதுகாப்பு வேலி போலப் புதர் மண்டி வளரக்கூடிய இயல்புடையது. இதன் மலர் மிகுந்த நறுமணம் உடையது. தாழையின் அடர்ந்த புதர் வேலியையும் உப்பங்கழிச் சூழலையும் சிலப்பதிகாரம் பின்வருமாறு பதிவு செய்துள்ளது:

"தாழை வேலி உப்பங்கழி" (சிலப்பதிகாரம், கானல் வரி, பா.அ.34-35)

நவீன இலக்கியத்திலும் இதன் அழகியல் வரவு சிறப்பாகக் கையாளப்பட்டுள்ளது. எழுத்தாளர் பொன்னீலன் தனது 'தேடல்' புதினத்தில் தாழை மலரின் தோற்றத்தையும் நறுமணத்தையும் கீழ்வருமாறு விவரிக்கின்றார்:

"தாழம்பூவின் கம்மென்ற மணம் காற்று கொள்ளையிட்டுக் கொண்டு வந்தது. கீழே வாய்க்காலின் அருகே தனியாக நின்ற நெடிய தாழையின் தலையில், பச்சை மடல்களுக்கு இடையே பட்டுக் குஞ்சம் போலப் பொன்னிறத்தில் ஒரு தாழம்பூ" (பொன்னீலன், தேடல், ப.79)

சங்க இலக்கியங்கள் தொட்டு இன்றைய தற்காலப் புதினங்கள் வரை 'தாழை' என்பது நெய்தல் நிலத்தின் இயற்கையான பாதுகாப்பரணாகவும், அழகியல் மற்றும் நறுமணத்தின் குறியீடாகவும் தொடர்ந்து பதிவு செய்யப்பட்டு வருவதை இதன் மூலம் அறிய முடிகிறது.

### 4.4 அடும்புக்கொடி (கடும்புக்கொடி) - மணற்குன்றுகளின் வலைப்பின்னலும் பரதவர் வாழ்வியலும்

அடும்புக்கொடி (*Ipomoea pes-caprae*) என்பது நெய்தல் நிலத்தின் கடற்கரை ஓரங்களில் படர்ந்து வளரும் ஒரு கொடி வகையாகும். சங்க இலக்கியங்கள் இதனை 'அடும்புக்கொடி'

என்றும் 'அடுப்பங்கொடி' என்றும் பதிவு செய்துள்ளன. நற்றிணைப் பாடல் ஒன்று இக்கொடியின் பரவலை,

"குன்றோங்கு வெண்மணல் கொடியடும்பு கொய்தும்" (நற்றிணை, பா.எ.254)

என்று குறிப்பிடுகின்றது. சங்க இலக்கியங்கள் மட்டுமன்றி, பக்தி இலக்கியத்திலும் இதற்குச் சான்றுகள் உள்ளன. திருஞானசம்பந்தர் தனது தேவாரப் பாடலில், சிவபெருமான் திருச்சடையில் சூடும் மலர்களுள் ஒன்றாக அடும்பின் மலரைக் குறிப்பிட்டுள்ளார்:

"அடும்பும் கொன்றையும் வன்னியும் மத்தமும் துடும்பல் மெய்சடைத் தூமணிச் சடையான்" (திருஞானசம்பந்தர் தேவாரம், திருஏடகம், பதி.3.32)

சங்ககாலம் தொட்டே அறியப்பட்ட இத்தகைய அடும்புக்கொடியைப் பொன்னீலன் தனது 'தேடல்' புதினத்தில் 'கடும்புக்கொடி' என்ற வட்டார வழக்குச் சொல்லால் பதிவு செய்துள்ளார். கடற்கரை மணல்வெளியில் அடும்புக்கொடிகள் வலை போல் பின்னிக் கிடக்கும் சூழலில், மீன்பிடித்துத் திரும்பிய மீனவர்கள் தங்களின் இரவு உணவை உண்டு மகிழ்ந்த நிகழ்வைப் பொன்னீலன் கீழ்வருமாறு விவரிக்கின்றார்:

"மணல்மேட்டில் கடும்புக் கொடியின் வலைப்பின்னல் மீது ரூபனும் தாசனும் வால்டரும் உட்கார்ந்திருந்தார்கள்" (பொன்னீலன், தேடல், ப.63)

இவ்வாறு, குமரி மாவட்டத்தின் நெய்தல் நிலப் பகுதிகளில் வாழும் கடல்சார் பரதவ மக்களின் வாழ்வியலையும், அவர்களைச் சுற்றி அமைந்திருக்கும் தனித்துவமான கடற்கரை இயற்கைச் சூழலையும் பொன்னீலனின் படைப்புகள் மிகத் துல்லியமாகவும் யதார்த்தமாகவும் காட்சிப்படுத்தியுள்ளன.

## 5. நெய்தல் தாவரங்களின் அறிவியல், தாவரவியல் மற்றும் மருத்துவப் பண்புகள்

நெய்தல் நிலத் தாவரங்கள் இலக்கியப் புனைவுகளில் வெறும் அழகியல் பின்னணியாக மட்டுமன்றி, கடலோரச் சூழலியல் மண்டலத்தைப் (Coastal Ecosystem) பாதுகாக்கும் இயற்கைப் போர்வையாகவும், பாரம்பரிய மருத்துவக் குணங்கள் நிறைந்த மூலிகைகளாகவும் திகழ்கின்றன.

### 5.1 தாவரவியல் வகைப்பாடு மற்றும் இனக்குழுத் தாவரவியல் ஒப்புநோக்கு

பொன்னீலனின் புதினங்களில் இடம்பெற்றுள்ள நெய்தல் தாவரங்களின் தாவரவியல் சார்ந்த தகவல்கள், குடும்பப் பிரிவுகள், தமிழ் வட்டார வழக்குகள் மற்றும் அவற்றின் இனக்குழுத் தாவரவியல் (Ethnobotanical) பயன்பாடுகள் அறிவியல் பூர்வமாகத் தொகுக்கப்பட்டுப் பின்வரும் அட்டவணையில் ஒப்பிடப்பட்டுள்ளன:

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

| **தாவரத்தின் தமிழ்ப் பெயர்** | **தாவரவியல் பெயர் (Scientific Name)** | **தாவரக் குடும்பம் (Family)** | **சங்க இலக்கியப் பதிவு** | **பொன்னீலனின் வட்டார வழக்கு / படைப்புச் சான்று** | **தாவரவியல் மற்றும் மூலிகை பயன்பாடுகள்** |
|---|---|---|---|---|---|
| **புன்னை** | *Calophyllum inophyllum* L. | Calophyllaceae / Clusiaceae | *"புன்னை நறுநெய் புகையும்"* (சிறுபாணாற்றுப்படை) | பரல்கள், வெளிச்செண்ணெய், புன்னைக்காய் எண்ணெய் (*மறுபக்கம்*) | விதைத் தைலம் விளக்கேற்றவும், தோல் நோய்கள், வாத நோய் (Rheumatism) மற்றும் புண்களை ஆற்றப் பயன்படுகிறது. |
| **முந்திரி** | *Anacardium occidentale* L. | Anacardiaceae | *"குறுங்கால் முந்திரிப் பூவின் அன்ன"* (ஐங்குறுநூறு) | கொல்லா மரம், கொல்லாம்பழம், அண்டி, அண்டி உடைப்பு (*மறுபக்கம்*) | பொய்க்கனி (Hypocarp) ஊட்டச்சத்து மிக்கது; அண்டி பருப்பு பொருளாதார வாழ்வாதாரத் தொழிலாக அமைகிறது. |
| **தாழை** | *Pandanus tectorius* Parkins | Pandanaceae | *"தாழை வேலி உப்பங்கழி"* (சிலப்பதிகாரம்) | தாழம்பூ, நெடிய தாழை (*தேடல்*) | கடற்கரை மணல் அரிப்புத் தடுப்பு வேலி; பூவின் |

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

| **தாவரத்தின் தமிழ்ப் பெயர்** | **தாவரவியல் பெயர் (Scientific Name)** | **தாவரக் குடும்பம் (Family)** | **சங்க இலக்கியப் பதிவு** | **பொன்னீலனின் வட்டார வழக்கு / படைப்புச் சான்று** | **தாவரவியல் மற்றும் மூலிகை பயன்பாடுகள்** |
|---|---|---|---|---|---|
| | on / *P. odorifer* | | | | நறுமணத் தைலம் மற்றும் வேர்கள் தசைப்பிடிப்பு நிவாரணி. |
| **அடும்பு** | *Ipomoea pes-caprae* (L.) R. Br. | Convolvulaceae | *"குன்றோங்கு வெண்மணல் கொடியடும்பு கொய்தும்"* (நற்றிணை) | கடும்புக்கொடி, கடும்புக்கொடி வலைப்பின்னல் (*தேடல்*) | மணற்குன்றுகளை நிலைநிறுத்தும் (Sand Dune Stabilizer); வீக்க எதிர்ப்பு (Anti-inflammatory) மற்றும் நச்சுக்கடி மருந்து. |

**5.2 கடற்கரைச் சூழல் பாதுகாப்பு மற்றும் மூலிகைப் பயன்பாடுகள்**

நவீன தாவரவியல் மற்றும் மருந்தியல் ஆய்வுகளின்படி, இத்தாவரங்கள் கடலோரச் சூழலில் ஆற்றும் பங்களிப்புகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

- **புன்னை (*Calophyllum inophyllum*)**: இம்மாமரம் கடற்கரைக் காற்றையும் உவர் மண்ணையும் தாங்கி வளரும் இயல்புடையது. விதைகளில் இருந்து பெறப்படும் 'வெளிச்செண்ணெய்' சாந்தோன்கள் (Xanthones) மற்றும் கொழுப்பு அமிலங்களைக் கொண்டுள்ளது. இது பாக்டீரியா எதிர்ப்பு மற்றும் தோல் அழற்சி எதிர்ப்பு மருந்துகளில் பயன்படுகிறது.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

- **அடும்புக்கொடி (*Ipomoea pes-caprae*)**: கடற்கரை மணல் மேடுகளில் கொடி வலைப்பின்னலாகப் படர்ந்து, கடல் அலைகளினாலும் காற்றினாலும் மணல் அரிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் முதன்மைப் முன்னோடித் தாவரமாகும் (Pioneer Sand Dune Species). இதன் இலைகளில் இருந்து பெறப்படும் சாறு கடல் சொறி (Jellyfish stings), வாத வலி மற்றும் தசை வீக்கங்களுக்கு மருந்தாகப் பயன்படுகின்றது.
- **தாழை (*Pandanus tectorius*)**: இது புயல் மற்றும் கடல் அலைகளின் தாக்கத்தைக் குறைக்கும் இயற்கை அரணாகச் செயல்படுகிறது. இதன் வேர்கள் மணலை இறுக்கமாகப் பற்றிப் பிடித்துக் கொள்கின்றன.

## 6. தொகுப்புரை

இயற்கையை வெறும் நுகர்வுப் பொருளாகப் பார்க்காமல், தன் வாழ்வின் ஆன்மாவாகக் கருதிய பழந்தமிழரின் திணைக் கோட்பாடு என்பது காலத்தைக் கடந்த ஒரு வாழ்வியல் நெறியாகும். எழுத்தாளர் பொன்னீலனின் படைப்புகள், வெறும் கதைகளைச் சொல்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்தின் தனித்துவமான ஐந்திணைச் சூழலியலையும், அங்கு வாழும் எளிய மக்களின் வாழ்வியல் எதார்த்தங்களையும் நமக்குக் காட்டும் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றன. மனிதனின் வாழ்வியல், மொழி, பண்பாடு ஆகிய அனைத்தும் அவன் வாழும் நிலப்பரப்போடும் புவியியல் சூழலோடும் ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன என்பதை இக்கருத்துக்கள் தெளிவுபடுத்துகின்றன.

தொல்காப்பியமும் பிங்கலந்தையும் காட்டும் பழங்காலக் கடல்சார் மரபானது, காலமாற்றத்திற்குப் பின்பும் பொன்னீலன் போன்ற படைப்பாளர்களின் புதினங்கள் வழியே இன்றும் தன் தனித்துவம் மாறாமல் ஆவணப்படுத்தப்பட்டுத் திகழ்கிறது. பொன்னீலனின் படைப்புகள் குமரி மாவட்ட நெய்தல் நிலத்தின் தாவரக் கூறுகளை வெறும் இயற்கை வர்ணனைகளாக மட்டும் சுருக்கிவிடாமல், அந்நில மக்களின் பண்பாட்டு மற்றும் வாழ்வாதார அடையாளங்களாகவே பதிவு செய்துள்ளன.

'பரல்கள்', 'வெளிச்செண்ணெய்', 'கொல்லா மரம்', 'அண்டி உடைப்பு', 'கடும்புக்கொடி' போன்ற குமரி மாவட்டத்திற்கே உரிய தனித்துவமான வட்டார வழக்குச் சொற்கள், நெய்தல் நில மக்களின் அன்றாட வாழ்க்கை, மருத்துவம், தொழில் மற்றும் வழிபாட்டு முறைகளோடு இத்தாவரங்கள் கொண்டுள்ள ஆழமான பிணைப்பை வெளிப்படுத்துகின்றன. குமரி மாவட்ட நெய்தல் நிலத் தாவரங்கள் என்பவை வெறும் தாவரவியல் பொருள்கள் அல்ல. அவை தமிழர்தம் தொன்மத்தையும், கடல்சார் மக்களின் வாழ்வியல் எதார்த்தங்களையும், அவர்களின் தனித்துவமான பண்பாட்டு எச்சங்களையும் தலைமுறை கடந்து தாங்கி நிற்கும் அழியாத வரலாற்று ஆவணங்கள் என்பது மிகத் தெளிவாகப் புலனாகிறது.

**DOI: https://doi.org/10.63300/tm12032026.41**

## 7. ஆசிரியர் முரண்பாட்டின்மை பிரகடனம்

**ஆசிரியர் பிரகடனம் (Author Declaration Statement for Conflict of Interest)**: இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர் திருமதி சு.வினோதா ஆகிய நான், இக்கட்டுரையை உருவாக்குவதிலும், தரவுகளைச் சேகரித்து ஆராய்வதிலும் எவ்விதமான நிதி சார்ந்தோ, தனிநபர் சார்ந்தோ அல்லது நிறுவனம் சார்ந்தோ எந்தவொரு நலன் முரண்பாடுகளும் (Conflict of Interest) இல்லை என முழுமையாகப் பிரகடனம் செய்கின்றேன். இக்கட்டுரை முற்றிலும் தமிழ் இலக்கிய மற்றும் சூழலியல் பண்பாட்டு ஆய்வு நோக்கில் மட்டுமே நேர்மையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

## 8. மேற்கோள் நூற்பட்டியல் (MLA Style - 9th Edition)


[1.] இளமாறன், ச. "பொன்னீலனின் மறுபக்கம் நாவலில் குமரி மாவட்ட சமூக வரலாற்றுப் பதிவுகள்." *தமிழ் மனம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, தொகுதி 1, எண் 2, 2022, பக். 12-18.

[2.] கருணாநிதி, நா. *சுற்றுச்சூழல் கல்வி*. சாந்தா பதிப்பகம், 2015.

[3.] சாந்தா, வனிதா. *சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலப் பரதவ மகளிர் வாழ்வியல்*. மணிவாசகர் பதிப்பகம், 2018.

[4.] சுடலைமாடன், மு. *சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்*. தமிழ் பாரம்பரிய அறக்கட்டளை, 2012.

[5.] தமிழ்ச்செல்வி, சு. *சிலாவம்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2023.

[6.] திருஞானசம்பந்தர். *தேவாரப் பாடல்கள் (மூன்றாம் திருமுறை)*. சைவ சித்தாந்த மகா சமாஜம், 1950.

[7.] தொல்காப்பியர். *தொல்காப்பியம் (பொருளதிகாரம் - இளம்பூரணர் உரை)*. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1998.

[8.] நாதன், கே. டி. முருகேசன். "சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலத் தாவரங்கள்." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. S3, 2023, pp. 29-35.

[9.] பிங்கல முனிவர். *பிங்கல நிகண்டு*. கழக வெளியீடு, 1968.

[10.] பொன்னீலன். *தேடல்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 1995.

[11.] பொன்னீலன். *மறுபக்கம்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2010.

[12.] Anbarasan, M., et al. "Flowering Plant Wealth of Sand Dunes and Coastal Areas of Kanniyakumari District, Tamil Nadu, India." *Environment Conservation Journal*, vol. 26, no. 2, 2025, pp. 328-339.

[13.] Padmavathy, A., and M. Anbarashan. "Phytomedicinal Survey of Coastal Sand Dune Flora in Puducherry." *Journal of Medicinal Plants Research*, vol. 5, no. 12, 2011, pp. 2568-2574.

[14.] Srinivasa Iyengar, P. T. *History of the Tamils from the Earliest Times to 600 A.D.* C. Coomarasawmy Naidu & Sons, 1929.